# தமிழ் கற்றல் கையேடு. ( 30 நாள்களில் தமிழ்ச் செய்தித்தாள் படித்தல் )

நீங்கள் பெற்றோரா? ஆசிரியரா? மக்கள் நலம் விரும்புபவரா? உங்களுக்கு அருகில், அல்லது உங்கள் பள்ளியில் 3ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் (தமிழ்வழி, ஆங்கிலவழி எங்கு படித்தாலும் சரி) இருக்கிறார்களா? இருந்தால் அவர்களிடம் தமிழ்ச் செய்தித்தாளைக் கொடுத்துப் படிக்கச் சொல்லுங்கள். படித்துவிட்டார்கள் என்றால் வாழ்த்துகள். அவர்களுக்கு இந்தக் கையேடு தேவையில்லை. படிக்கத் தடுமாறுகிறவர்களுக்கு இந்தக் கையேடு உதவும்.

1) செய்தித்தாளில் ஒருசில சொற்களை மட்டும் படிக்கத் தடுமாறுகிறார்கள் என்றால் அவர்களுக்குப் பயன்படுத்தும் முறை.

அவர்களிடம் இந்தக் கையேட்டைக் கொடுத்துப் படிக்கச் சொல்லுங்கள். ஒவ்வொரு பக்கமாகப் படிக்கட்டும். நீங்கள் எழுத்தைச் சொல்லிக் கொடுக்க வேண்டாம். பார்த்துக் கொண்டிருந்தால் போதும். படிக்கத் தடுமாறுகிற பக்கத்தைக் குறித்துக் கொள்ளுங்கள். கையேட்டை இறுதிவரை படிக்கட்டும். படிக்கத் தடுமாறுகிற பக்கத்தில் உள்ள எழுத்துகள் மாணவர் மனதில் பதியவில்லை. அந்த எழுத்துகளை மட்டும் சொல்லிக் கொடுத்தால் போதும். சில நாள்களில் படித்து விடுவார்கள். இந்தக் கையேடு மாணவர்களிடமே இருக்கட்டும். சட்டைப் பையில் வைத்துக் கொள்ளட்டும். அவர்கள் விரும்புகிற நேரத்தில் எடுத்துப் படிக்கட்டும். இந்தக் கையேடு அவர்களுக்குப் படித்தல் திறனை வளர்த்துவதற்கான படி அமைத்துக் கொடுக்கும்.

2) செய்தித்தாளை முழுமையாகவே படிக்கத் தெரியவில்லை என்றால் அவர்களுக்கு ப் பயன்படுத்தும் முறை.

இந்தக் கையேட்டில் 64 பக்கங்கள் உள்ளன. பக்கம் 3 முதல் 33 ஆவது பக்கம் வரை (ஓரத்தில் பச்சை வண்ணம் உடைய பக்கங்கள்) 18 மெய்யெழுத்துகளும் 18 உயிர்மெய்எழுத்துகளும் உள்ளன. ஒரு பக்கத்திற்கு ஒரு மெய்யெழுத்தும் ஒரு உயிர்மெய்யெழுத்தும் உள்ளன. இந்த இரண்டு எழுத்துகளை எழுதவும், ஒலிக்கவும் கற்றுக் கொடுக்கவும். அடுத்த நாளில், அந்த எழுத்துகளைக் கற்றுக் கொண்டார்களா இல்லையா என்று சோதனை செய்ய, பழைய செய்தித்தாளைக் கொடுத்து, முதல்நாள் கற்ற எழுத்துகளை வட்டமிடச் சொல்லவும். 5 எழுத்துகளை வட்டமிடச் சொல்லவும். சரியான எழுத்துகளை வட்டமிட்டார்கள் என்றால், வெற்றி பெற்றுவிட்டார்கள். அவர்களை அடுத்த பக்கத்தில் உள்ள, "இரண்டு எழுத்துகளாக இணைந்துள்ளவற்றை" படிக்கச் சொல்லவும், ஆசிரியர் சொல்லிக் கொடுக்கக் கூடாது. மாணவர்களே முயற்சி செய்து ஒலிக்க ஊக்குவிக்க வேண்டும். "இணைத்துச் சொல்லுங்கள்", "இணைத்துச் சொல்லுங்கள்" என்று ஊக்குவித்தால் போதும். அவர்களே முயற்சி செய்யட்டும், முடியாத நிலையில் உதவி செய்யலாம். ஒன்றிரண்டு பக்கங்களில் அவர்களாகவே ஒலிக்கக் கற்றுக் கொள்ளுவார்கள். தாங்களாகவே "இணைந்த எழுத்துகளை" ஒலிப்பார்கள். ஒலிப்பதை ஆசிரியர் சொல்லிக் கொடுத்தால் ஒலிப்புமுறை அவர்களுக்குள் மனப்பாடமாகத்தான் பதியும். ஒலிப்புமுறை இயல்பாக அவர்களுக்குள் பதியாது.

தமிழ் ஓர் ஒலியன் மொழி, இரண்டு எழுத்துகளை வேகமாக ஒலித்தாலே அதற்குரிய ஒலிப்புமுறை தானாகவே வரும். இதுதான் அடிப்படை. எனவே தான் "இரண்டு எழுத்துகளாக" உள்ளவற்றை அவர்களே படிக்கத் தூண்டவேண்டும்.

33ஆவது பக்கம் வரை 1) எழுத்துகளைச் சொல்லிக் கொடுத்தல், 2) அடுத்த நாளில் படித்த எழுத்துகளைச் செய்தித்தாளில் வட்டமிடுதல், 3) இரண்டு இரண்டு எழுத்துகளாக இணைந்து உள்ளவற்றை படித்தல், 4) சொற்களைப் படித்தல், படித்த சொற்களைப் புரிந்து கொள்ளுதல் என்கிற படிநிலைகளில் ஒவ்வொரு பக்கத்தையும் கற்பிக்கவும்.

34 ஆம் பக்கத்திலிருந்து 38 ஆவது பக்கம் வரை உயிரெழுத்துகள் உள்ளன. குறில், நெடிலை (அ, ஆ) திருத்தமாக ஒலிக்கப் பயிற்சி தரவும். (உ, ஊ, ஔ எழுத்துகளையும், அவற்றின் உயிர்மெய் எழுத்துகளையும் பிறகு படிக்கலாம்)

39 ஆவது பக்கம் மிகவும் முக்கியமானது. இதில் 9 குறியீடுகள் உள்ளன. க்+ஆ=கா. "க" எழுத்தின் அருகில் சிவப்பு வண்ணமிட்ட துணைக்கால் என்கிற குறியீடு உள்ளது. இந்தக் குறியீடு இருந்தால் "ஆ" அதாவது "கா" என்று ஒலிக்க வேண்டும் என அறிமுகப்படுத்தவும். இவ்வாறே மற்ற குறியீடுகளையும் கரும்பலகையில் எழுதிக்காட்டி, அவை எழுத்துகளுக்கு அருகில் இருந்தால் எப்படி ஒலிக்க வேண்டும் என்பதை ஒலித்துக்காட்டி, 8 குறியீடுகளையும் அறிமுகப்படுத்தவும்.

40 ஆவது பக்கத்திலிருந்து 55 ஆவது பக்கம் வரை 8 குறியீடுகளுக்கான எழுத்துகள் உள்ளன. 40 ஆவது பக்கத்தில் "ஆ" வரிசை உயிர்மெய்எழுத்துகள் உள்ளன. அவை "கசடதபற, யரலவழள, ஙஞணநமன" என்ற வரிசையில் உள்ளன. ஓர் எழுத்தை ஒலித்துக் காட்டினால் மற்ற எழுத்துகளை மாணவர்களே ஒலிப்பார்கள். முன்பு செய்ததைப் போலவே "ஆ" வரிசை உயிர்மெய் எழுத்துகளை அறிமுகம் செய்த பிறகு, அடுத்த நாளில் அந்த வரிசை எழுத்துகளைச் செய்தித்தாளில் வட்டமிடச் செய்து மீள்பார்வை செய்யவும். அடுத்த பக்கத்தில் உள்ள சொற்களைப் படித்துப் பொருளுணரச் செய்யவும்.

இதுபோலவே 42 ஆவது பக்கத்திலிருந்து 55 ஆவது பக்கம் வரை கற்பிக்கவும். ஒவ்வொரு பக்கத்திலும் மாணவர்களுக்குக் குறியீடுகளை அறிமுகப்படுத்தி, அந்தக் குறியீடு வந்தால் எப்படி ஒலிக்க வேண்டும் என்பதை அறிமுகப்படுத்தினால் போதும். மிக எளிமையாக 18 X 8 = 144 எழுத்துகளை எட்டே நாள்களில் அறிந்து கொள்வார்கள்.

இறுதியாகத்தான் "உ, ஊ," எழுத்துகளையும், "உ, ஊ" வரிசை உயிர்மெய் எழுத்துகளையும் அறிமுகம் செய்யப் போகிறோம். இந்த வரிசை எழுத்துகள் புதிய வடிவம் பெறுவதால் மாணவர்களால் எளிதில் உள்வாங்க முடிவதில்லை. "ஈ" வரிசைக்குப் பிறகு "உ, ஊ" வரிசை உயிர்மெய் எழுத்துகளைச் சொல்லிக் கொடுத்தால், அதற்குப் பிறகு சொல்லிக் கொடுக்கும் அனைத்து எழுத்துகளும், 30 விழுக்காடு மாணவர்களுக்குப் புரியாமல் குழப்பத்தை உண்டாக்குகின்றன. எனவே தான் இவை இறுதியாக அறிமுகம் செய்யப்படுகின்றன. அதிலும் அதிகம் பயன்படுகிற எழுத்துகள் மட்டுமே தெரிந்தாலே போதும். படிக்கத் தொடங்கி விடுவார்கள், ஔ வரிசையில் 4 சொற்களே உள்ளன, அவை மட்டும் தெரிந்தாலே போதும்.

63 ஆவது பக்கம் ஆசிரியர் கற்பிப்பதற்கு உதவுவது. "ட, ர, வ" என்கிற மூன்று எழுத்துகளிலிருந்து எப்படி 12 எழுத்துகள் உருவாகின்றன என்பதைக் கற்பிக்கத் தொடங்குகிற முதல் நாளில் ஆசிரியர் கரும்பலகையில் எழுதிக் காட்டி அறிமுகப் படுத்தினால் போதும். மாணவர்களுக்கான எழுத்து எழுதுமுறை எளிமையாகிவிடும்.

அதுபோலவே 39 ஆம் பக்கத்தில் உள்ள குறியீடுகளைக் கரும்பலகையில் எழுதிக்காட்டி எந்தக் குறியீடு வந்தால் எப்படி ஒலிப்பது என்பதைச் சொல்லிக் கொடுத்தால் போதும். மாணவர்களது கற்றல் எளிமையாகும்.

25 ஆண்டுகள் ஆசிரியப்பயிற்சிப் பணியில் நான் கண்டறிந்தவை இவை. மாணவர்கள் தடுமாறுகிற இடங்களைக் கண்டறிந்து, அவற்றுக்கான கருத்துருக்களை இணைத்து, வரிசைப்படுத்தி நான் உருவாக்கியுள்ள இந்தத் தமிழ் கற்றல் கையேட்டின்வழி மாணவர்கள் தமிழ்ச் செய்தித்தாள் படிக்க உதவி செய்யுங்கள். உங்களுக்கு என் அன்பு வாழ்த்துகள்.

ம. நடேசன்.,M.A.,M.Sc.,M.Ed. M.Phil.,DDE., முதுநிலை விரிவுரையாளர் (ஓய்வு)., 9788552061, Mail ID : pollachinasan@gmail.com, எனது இணையதளம் http://www.thamizham.net கல்விக்கான எனதுதளம் : http://www.pollachinasan.co.in/tt/index.htm
M.Natesan., a/c No : 611201508406., ICICI Bank, Pollachi Branch. IFSC Code : ICIC 0006112